Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர் காலக்கட்டிடக்கலை

**R Vijayalakshmi**

57

**ஆய்வு நோக்கம்:**

தமிழகக் கோவில் கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், குடைவரைக் கோவில்கள் ஆகியவற்றிற்கு தன்னிகரில்லாமல் பல்லவர்கள் ஆற்றிய தொண்டினை வெளிப்படுத்துவதே ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு சுருக்கம் :**

பல்லவர்கால கட்டிடக்கலை என்ற தலைப்பின் வாயிலாக பல்லவர்களின் கலை ஆர்வம் மற்றும் அவர்கள் கட்டிடக்கலையில் கொண்டு வந்த புதிய உத்திகள் குடைவரைக் கோவில்கள், ஒற்றைக்கல் இரதங்கள், திறந்தவெளிப் புடைப்புச் சிற்பங்கள், கட்டுமானக் கோவில்கள், பல்லவர்கால சிற்பக்கலை, ஓவியக்கலை குறித்து எடுத்துரைக்கப் படுகிறது.

**திறவுச் சொற்கள் :**

சிற்பம், ஓவியம், குடைவரைக் கோவில்கள், திறந்தவெளிப் புடைப்புச் சிற்பங்கள், கட்டுமானக் கோவில்கள்,

**முன்னுரை**

ஓரினத்தின் நாகரீகச் செழுமையினை எடுத்துக்காட்டும் சின்னங்களில் குறிப்பிடத்தக்க கலை கட்டிடக்கலையாகும். பருப் பொருளாலான கட்டிடங்கள்- அதிலும் கருங்கற்களாலான கட்டிடங்கள் பல நூற்றாண்டுகள் அழியாமல் நிலைப் பெற்று படைத்தவர்களின் புகழினை இவ்வுலகிற்கு பறைசாற்றும், எனவே ஓரினத்தின் நாகரீகத்தினை நெடுங்காலம் நிலைபெறச் செய்யும் கட்டிடக் கலைக்குத் தனியிடமுண்டு. கோயிற் கட்டிடக்கலையில் சிற்பமும், ஓவியமும் இடம்பெற்றுள்ளதால் பிறகலைகளின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாகவும், தலைமைப் பெற்று விளங்குவது வியப்புக்குரிய ஒன்றாகும்.

**தோற்றம் :**

பல்லவர் காலமானது கி.பி. 6-ம் நூற்றாண்டு முதல் 9-ம் நூற்றாண்டு வரையிலான காலமாகும். பல்லவர் காலமே கட்டிடக் கலையின் தொடக்ககாலம் எனலாம். ஆந்திரப் பகுதியில் இருந்து வந்தவர்கள் பல்லவர்கள். ஆந்திரப் பகுதியில் பலகுகைக் கோயில்கள் உள்ளன. அவற்றைக்கண்டு வியந்த விசித்திரசித்தனாகிய முதலாம் மகேந்திரவர்மன் அத்தகு குகைக் கோயில்களைத் தான் ஆண்ட தொண்டை நாட்டில் ஏற்படுத்தினான். வல்லம் சீயமங்கலம், மாமண்டூர், மகேந்திரவாடி, பல்லாவரம், திருச்சி போன்ற இடங்களில் இவனுடைய குகைக்கோயில்கள் காணப்படுகின்றன. மண்டகப்பட்டி (கி.பி.**615-630**) உள்ள கோயிலில் செங்கல் சுண்ணாம்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் விசித்திரசித்தன் அமைத்தகோயில் இது" என்ற



அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
(பொறியியல் தொழில்நுட்ப தமிழ் வளர்ச்சி மையம்,
கட்டிடக்கலைத்துறை & கட்டுமானத்துறை)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
(கட்டடக்கலைத்துறை) மற்றும்
பிரணவ் நுண்கலை ஆய்விதழ்
இணைந்து நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கம்
' தமிழரின் கட்டடக்கலை தொழில்நுட்பம் "
Special Issue - Volume -2 Issue -2

**கல்வெட்டுள்ளது.** எனவே முதன்முதலில் இத்தகு கோயிலை அமைத்தவன் இவனே என்று துணிகின்றனர். இவை பற்றி டாக்டர் மா. இராசமாணிக்கனார். அவர்கள் கூறுவது சிந்திக்கத்தக்கதாகும். மண்டபம் போன்ற அமைப்புடன் நான்கே தூண்களையும், அகன்ற கதவுளையும் சுற்றிலும் தாழ்வாரத்தையும். கல்லாலான மேற் கூரையையும் கொண்ட சமணர் கோயில்களின் அமைப்புடையனவே சிவன் கோவில்கள் என்கிறார். **(பல்லவர் வரலாறு டாக்டர் மா. இராச மாணிக்கனார் எட்டாம் பதிப்பு 1971. பக்-309)** மேலும் சிவன் கோயில்களின் அமைப்பு தில்லைப்பொன்னம்பலத்தையும் ஒத்துள்ளது என்பார்.

**குடைவரைக் கோவில்கள் :**

மகேந்திரனுடைய குகைக்கோயில்கள் மலையின் சரிவுகளில் அமைந்தன. உச்சியிலுமின்றி, அடியிலுமின்றி இடையிலிருக்கும் சுவர்கட்கும், தூண்கட்கும், சிலைகட்கும் இடம்விட்டு மிகுந்தபகுதி குடையப்பட்டிருக்கும் - சுவர்களில் புராண கதைகளைக் கூறும் சிற்பங்களிருக்கும்.

இவற்றைப் பற்றி அறிஞர் **கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார்** கூறுவன சிந்திக்கத்தக்கவை. இவை எளிய அமைப்புடையவை என்றும் தூண்களும் பின்சுவரில் இரண்டொரு கருவறைகளுமே உண்டென்றும் முகப்பிலுள்ள தூண்களே குடைவரையின் முக்கிய இயல்பென்றும் திருச்சிராப்பள்ளி மண்டகப்பட்டு ஆகிய இடங்களில் உள்ள முற்பட்ட வற்றில் தூண்கட்குமேல் கொடுங்கை இல்லை என்றும் பல்லவபுரக் குடைவரை போன்ற சற்று பிற்பட்டவற்றில் ஒரு கொடுங்கையும் சேர்ந்துள்ளது என்றும் இன்னும் சற்று பிந்திய தளவனூர்க் கோயிலில் கொடுங்கையிலே கூடு என்னும் ஒரு வகை அணி இணைந்துள்ளது என்றும் கூறியுள்ளார். **கே.ஏநீலகண்ட சாஸ்திரியார்** தென்னிந்திய வரலாறு பக். **245.**

பல்லவர் குடைவரைகளுள் கல்லாலான இறையுறுவங்கள் கருவரையில் அமைக்கப்படவில்லை. கருவறையின் பின்சுவரின் பாறையிலேயே பீடம் ஒன்று செதுக்கப்பட்டு அதன்மீது சுதை அல்லது மரத்தாலான இறையுறு நிறுவப்பட்டிருக்கலாம் அல்லது சுவரிலேயே சுதைபூசி அதன் மீது வண்ணத்தில் இறையுருவம் தீட்டியிருக்கலாம் பொய்கையாழ்வாரது இயற்பா-முதல் திருவந்தாதி மூலம் அக்காலத்தில் சித்திர வடிவில் இறைவன் வழிபடப்பட்டதை அறியமுடிகிறது

“அவரவர் தாம் தாம் அறிந்தவாறேத்தி
இவருவர் எம்பெருமான் என்று சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர் உலகளந்த
மூர்த்தி யுளவேமுதல்” (பா.எ. **3197**)

பல்லவரது குடைவரைகளில் பெரும்பாலானவை நீர்ப்பாசனக் குளங்கட்கும், நதிகளுக்கும், சமணர் தங்கியிருந்த இடங்களுக்கும் அருகில் அமைந்துளன.

**ஒற்றைக்கல் இரதங்கள்.**

கடினமான கற்பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை அமைத்த பல்லவ மன்னர் அந்த அனுபவத்தின் காரணமாக முப்பருமான ஒற்றைக்கல் இரதங்களையும் உருவாக்கினர். மகாபலிபுரத்தில் ஒற்றைக்கல் இரதங்களை உருவாக்கிய பல்லவ மன்னன் நரசிம்மபல்லவன் (கி.பி.620-668) ஆவான். ஒற்றைக்கல் இரதங்கள் அனைத்தும் மகாபலிபுரத்திலேயே அமைந்திருப்பதால் இவைகளை உருவாக்கியது மாமல்லன் என்று கு.சேதுராமன் தம் தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டு கலை வரலாறு நூலில் கூறுகிறார்.

**திறந்தவெளிப் புடைப்புச் சிற்பங்கள் :**

இந்தியாவில் உள்ள மிகப்பெரிய பாறைச் சிற்பமான அர்ஜுனன் தபசு 96 அடிநீளமும் 43 அடி அகலமும் கொண்ட நீண்ட பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. இப்பாறைச் சிற்பம் உலகில் தோற்றுவிக்கப்பட்ட சிற்பங்களில் ஒப்பற்ற சிற்பம் என **டாக்டர் ஏ.எல். பாஷ்யம்** என்ற அறிஞர் **“வியப்பே உன் பெயர்தான் இந்தியா”** என்ற ஆங்கில நூலில் கூறியுள்ளது இச்சிற்பத்தின் சிறப்பை உணர்த்தும்.

**பல்லவர்களது கட்டுமானக் கோவில்கள் :**

காஞ்சி – கைலாசநாதர் கோவில்

பனைமலை – தாளிஸ்வரர் கோவில்

காஞ்சி - வைகுண்ட பெருமாள் கோவில்

திருத்தணிகை – வீரட்டானேஸ்வரர் கோவில்

உதிரமேரூர் – சுந்தரேஸ்வரர் கோவில்

இக்கோவில்கள் அனைத்தும் பல்லவர்கால கட்டிட கலைக்கு சிறந்த உதாரணமாகும்.

**பல்லவர்கால சிற்பக்கலை :**

பண்டையக் காலம் தொட்டே வளர்ந்து வந்துள்ள கவின் கலைகளுள் ஒன்று சிற்பக்கலையாகும். பல்லவர் காலத்திற்கு முன்பு பெரும்பாலும் மண்ணுருவங்களும், சுதையுருவங்களுமே செய்யப்பட்டன. மண்ணாலான சிற்பங்களை போலவே சுதை சிற்பங்களும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தன. “சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு, நெல்லிக்காயின் சாறு முதலிவற்றை ஊற்றி அரைத்து வச்சிரம் போல் செய்து அதைக் கொண்டு உருவங்கள் செய்வது பண்டைய மரபு. உருவங்களை செய்வதற்கு எதுவாக உள்ளே வலிய மரத்தாலான முளை ஒன்று வைக்கப்பட்டுச் செங்கல், கம்பிகள் முதலிவற்றை பொருத்தி சுண்ணாம்பு கரை பூசி உருவங்கள் அமைக்கப்படும்.” (இரா. நாகசாமி தமிழக கோவில் கலைகள், பக். 79-80.) காவிரி பூம்பட்டினத்து அகழ்வாழ்வில் இத்தகு உருவங்கள் கிடைத்துள்ளன.

தமிழகத்தில் சிற்பம் மற்றும் கற்சிற்பங்களைத் தொடக்கி வைத்த பெருமை பள்ளவர்கட்கு உரியதாகும். இவர்கள் கட்டிய குடைவரைக் கோயில்களிலும், கட்டுமான கோயில்களிலும் எண்ணற்ற சிற்ப உருவங்கள் உள்ளன. கட்டிடம் வேறு சிற்பம் வேறு என்று பிரித்தறிய முடியாதபடி

இவை இரண்டும் இணைந்து நிற்பது பல்லவர்கால தனித்தன்மையாகும்.

**ஓவியக்கலை :**

ஓவியக்கலைக்கலை மிகப் பழமையான கவின் கலைகளுள் ஒன்றாகும். பெரிய மாளிகை வீடுகளில் சுவர்களில் வெள்ளி போன்ற சுதையினை பூசி வண்ண ஓவியங்களை வரைந்தனர்.

**“கயம் கண்டன்ன வயங்குடை நகரத்துச்**

**செம்பியன் ரன்ன செஞ்சுவர் புனைந்து” மதுரைக்காஞ்சி – 484.5**

என்னும் இலக்கிய சான்றினால் சுவர்கள் புனையப்பட்டமையினை உணரலாம். சங்க காலத்திற்கு பின்னர் தமிழகத்தை ஆண்ட பல்லவர்கள் கலைகளை வளர்ப்பதில் தனி ஈடுபாடு கொண்டிருந்தனர். முதலாம் மகேந்திரவர்மன் அனைத்து கலைகட்கும் காவலனாக **“சித்திரகாரபுலி”** என்று அழைக்கப்பட்டான். இரண்டாம் நரசிம்மன் “கலைக்கடல்” மற்றும் “கலைக்காவலன்” என்ற சிறப்பு பெயருடன் பல கலைகட்கும் உரியவனாக விளங்கினான்.

**முடிவுரை :**

பல்லவர் காலக்கட்டிடக்கலையானது பல படிநிலைகளில் வளர்ச்சி அடைந்து இருப்பதை இவ்வாய்வின் வாயிலாக நாம் காண முடிகின்றது. இவை மட்டுமல்லாமல் பிற்கால கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை ஓவியக்கலை வளர்ச்சிகளுக்கும் முன்னோடியாக பல்லவர் காலக் கட்டிடக்கலை திகழ்ந்தது என்றால் அது மிகையாகாது.

**துணை நூல் பட்டியல் :**

1. **இராச மாணிக்கனார், டாக்டர் மா.ரா தமிழர் நாகரிகமும் பண்பாடும்.**
2. **நீலகண்ட சாஸ்திரியார்,** கே.ஏ. தென்னிந்திய வரலாறு
3. **சேதுராமன்,** க. தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டு கலை வரலாறு, ஜே.ஜே.பப்ளிகேஷன், மதுரை, **2001**
4. **வெங்கட்ராமன்,** ஆர். இந்தியக் கோவில் கட்டிக்கலை வரலாறு என்.எஸ் பப்ளிகேஷன், மதுரை, **1983.**
5. **நாகசாமி,** இரா. தமிழ் கோவில்கலைகள் வரலாறு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, **1976.**